

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.1.2025) முகாம் அலுவலகத்தில், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, கழக மாநில விவசாய அணி இணைச் செயலாளர் குறிஞ்சி என். சிவகுமார், ஈரோடு தெற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆ. செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (11.1.2025) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எஸ்.எஸ். பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ், எம். பாபு ஆகியோர் சந்தித்து, சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரையில் ஏழை எளிய பட்டியலின மக்களுக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும்விதமாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களை சீர்செய்தும், புதியதாக நிலங்களை கையகப்படுத்தியும் ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்

# 1 லட்சத்து 8 ஆயிரம் பேருக்கு ரூ. 6 கோடியே 41 லட்சம் சாதனை ஊக்கத்தொகை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, ஜன. 12–**

**“பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒரு இலட்சத்து எட்டாயிரத்து நூற்றைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து பதினெட்டாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்” என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டில் சிறப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் இயங்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தான் பயணிகள் அடர்வு, பேருந்து பயன்பாடு, எரிபொருள் செயல்திறன் ஆகியவற்றில் உயர்ந்து விளங்குகின்றன.

குக்கிராமம் முதல் மாநகரங்கள் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்கு தடையின்றி, போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு ஆகிய அனைத்து நிறுவனங்களிலும் தற்போது சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றார்கள்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு ஆகியவற்றில் பணிபுரியும், போக்குவரத்து கழகங்களின் பணியாளர்களில், 2024ஆம் ஆண்டில் 91 நாட்கள் மற்றும் அதற்கு மேலும், ஆனால் 151 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 85 ரூபாய் வீதமும்; 151 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் ஆனால் 200 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 195 ரூபாய் வீதமும், 200 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு 625 ரூபாய் வீதமும் பொங்கல் “சாதனை ஊக்கத் தொகை” வழங்கப்படும்.

இந்த உத்தரவின்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஒரு இலட்சத்து எட்டாயிரத்து நூற்றைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து பதினெட்டாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### இந்தியாவிலேயே பெண்கள் அதிகம் வேலைக்குச் செல்கின்ற மாநிலம் –

# பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

சென்னை, ஜன.12–

சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினர் டாக்டர் சரஸ்வதி பேசும் போது, தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்கிற வகையில் பேசினார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது :

பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள் பெண்களுக்கு தமிழ்நாட்டிலே பாதுகாப்பு இல்லை. பெண்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பைத் தமிழ்நாட்டிலே வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கைகளையெல்லாம் இங்கே வைத்தார்கள். நீங்கள் ஆளுகிற மாநிலத்தைவிட இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள்தான் அதிகம் பேர் வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். சட்டம்ஒழுங்கு பெண்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கிறது. இன்று காலையிலேகூட அதை இன்னும் வேகப்படுத்தக்கூடிய வகையில், இன்னும் கடுமையான சட்டத்தை இன்றைக்கு நான் இங்கே அறிமுகம் செய்திருக்கிறேன் என்பதையும் சட்டமன்ற உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிலளித்தார்.

